**<u>கூடுதல் சார்பு நீதிமன்றம், காஞ்சிபுரம்</u>**

நாள் 12.03.2026

அசல் வழக்கு எண்.28 /2010

வா.சா.1 – கதிரவன், த/பெ.பெரியசாமி

சாட்சி சத்யபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**<u>குறுக்கு விசாரணை</u>**

1913 ஆம் ஆண்டு பத்திரம் பற்றி சொல்லி உள்ளீர்கள் அந்த பத்திரம் யார் வசம் உள்ளது என்றால் நகல் காப்பி திருக்கோயில் வசம் இருக்கிறது அசல் யார் வசம் இருக்கிறது என்றால் தெரியாது. அசல் ஆவணம் எந்த மொழியில் எழுதப்பட்டது தெரியுமா என்றால் தமிழில் எழுதப்பட்டுள்ளது. லட்சுமி பிரபன்ன தேவஸ்தான அறக்கட்டளை இருக்கிறதா என்றால் இருக்கிறது அதில் கைங்கரியம் தற்சமயம் செய்வது இல்லை. மேற்படி டிரஸ்டில் நியமிக்கப்பட்ட அறங்காவலர்கள் ரங்கநாத சுவாமி தேவஸ்தானத்தில் இருந்த அறங்காவலர்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. 1913 ஆம் ஆண்டு பாத்திரத்தின் படி சர்வே எண் 835/ஏ அமைந்த ராமானுஜ கூட வீடு மற்றும் நான்கு கடைகள் மட்டும் தான் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பத்திரத்தில் சொல்லப்பட்ட நான்கு கடைகளில் முதல் பிரதிவாதி வனிதா ஒரு கடையில் வாடகைக்கு இருக்கிறார் என்றால் தெரியாது. மேற்படி 1913 ஆம் ஆண்டில் பத்திரத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கும் வழக்கு சொத்துக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை. இந்த சர்வே எண்ணில் இருந்து சப் டிவிஷன் செய்து ஆக்கிரமிப்பாளராக இருந்து வருகிறார். தற்பொழுது வீடும் 4 கடை கட்டிடமும் இருக்கிறதா என்றால் இருக்கிறது. வழக்கு சொத்தில் சர்வே எண் 835/1பி/1பி/1 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதனுடைய கதவு எண் 46 பி என்று

போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த இடத்தில் காலி இடமா கட்டிடம் இருக்கிறதா என்று சொல்லவில்லை என்றால் சரிதான் முன்புறம் சட்டர் போட்ட கடையையும் சிறிய வாசல் வைத்த பின்புறம் வீடு உள்ளது ஹாஸ்பிட்டாஸ் சீட்டு போடப்பட்டுள்ளது. வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்து விவரத்தை விவரத்தில் கடை வீடு அவ்வாறு அமைந்துள்ளது என்று சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை ஆனால் தற்போது அவ்வாறு இருக்கிறது கடையும் வீடும் உள்ளது. மேற்படி சொல்லப்பட்டுள்ள சர்வே எண்ணுக்கும் கடைக்கும் சம்பந்தம் இல்லை என்று சொன்னால் சரி இல்லை சம்பந்தம் இருக்கிறது. இந்த வழக்கில் வழக்கு சொத்து நான்கு புற எல்லைகளாக கிழக்கில் பொட்டிக்கடை சந்து மேற்கில் கோயிலுக்கு பின்புறம் உள்ள காலி மனை வடக்கில் ஆதி கேசவ பெருமாள் கோயிலுக்கு சொந்தமான சொத்து தெற்கில் கோயில் சொத்து என்று சொல்லி உள்ளீர்கள் என்றால் சரிதான். கடந்த 24 5 2002ல் ராஜி லோசனாரி என்பவர் தாமோதர தாஸ் என்பவர் பெயரில் உயில் ஆவணம் எழுதி வைத்துள்ளார் அது பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வழக்கில் முதல் பிரதிவாதி வனிதா என்பவர் தாமோதரதாஸ் என்பவரிடமிருந்து 800 சதுர அடி நிலத்தை கடந்த 31.03.2000ம் ஆண்டில் கிரயம் பெற்றார் என்றால் சரிதான் அது இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் அனுமதி இன்றி அவ்வாறு செய்யப்பட்டுள்ளது. ஆகவே அந்த கிரயம் செல்லாது அந்த சொத்து விவரத்தில் சர்வே எண் 835/1பி/1பி/1 என்று போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் கிழக்கு மேற்காக இருபுறமும் 40 அடி என்றும் வடக்கு தெற்காக இருபுறமும் 20 அடி என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் காலிமனை கட்டிடம்

கிடையாது என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அப்பொழுது இருந்து இருக்கலாம் இல்லாமலும் இருக்கலாம் ஆக்கிரமிப்பாளர் பின்னர் ஆக்கிரமிப்பு செய்து கட்டிடம் கட்டி இருக்கலாம். பத்திரப்பதிவின்போது இல்லாமல் இருந்திருக்கலாம். மேற்படி பத்திரத்தில் நான்கு பக்க எல்லைகள் கிழக்கே பொட்டிக்கடை சந்து மேற்கே கடை எண் 43 44 45 46 க்கு பின்பக்கம் பொட்டிக்கடை சந்து ஒட்டினார் போல் உள்ள காலி மனை தெற்கில் மேற்படி டிரஸ்ட் க்கு கடைகள் வடக்கில் ஆதி கேசவ பெருமாள் கோயில் கட்டிடம் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளதுதான் .முதல் பிரதிவாதி வனிதா என்பவர் லட்சுமி பிரபன்னா ராமானுஜ தாஸ் அறக்கட்டளைக்கு வாடகைதாரர் இல்லையென்றால் வாடகைதாரர் இல்லை அவர் ஆக்கிரமிப்பாளர் ஆவார் .முதல் பிரதிவாதி வனிதா என்பவர் ஆதி கேசவ பெருமாள் கோவிலுக்கு வாடகைதாரர் இல்லை என்று சொன்னால் சரிதான். கட்டளை சொத்துக்கு வாடகை செலுத்த வேண்டும். இந்த வழக்கில் லட்சுமி பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளைக்கு சொந்தமான சொத்து என்று நீங்கள் இந்த வழக்கில் விளம்புகை பரிகாரம் வழக்கில் கோரவில்லை என்றால் விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளோம் அதேபோல் ஆதிகேசவப் பெருமாள் கோயிலுக்கு சொந்தமான சொத்து என்று வழக்கில் விளம்புகை பரிகாரம் கோரவில்லை என்றால் சரியில்லை. லட்சுமி பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளைக்கு சொந்தமானது என்று வழக்கில் கூறியுள்ளோம். முதல் பிரதிவாதி வனிதா பெயரில் உள்ள பத்திரம் செல்லத்தக்கது அல்ல என்று நீங்கள் வழக்கில் பரிகாரம் கேட்கவில்லை என்றால் ஆணையர் அதிகாரம் இல்லாமல் செய்யப்படும் அனைத்து பத்திரங்களும் செல்லத்தக்கது அல்ல.

சர்வே எண் 835/1பி/1பி/1 ஆனது 1913 ஆம் ஆண்டு பத்திரத்தில் குறிப்பிடவில்லை என்றால் தெரியாது. முதல் பிரதிவாதி வனிதா வாங்கிய கிரைய பத்திரத்தில் தாமோதரதாஸ் அனுபவித்து வந்த சொத்தினை எழுதிக் கொடுத்ததாக எழுதப்பட்டுள்ளது என்றால் அது தவறாகும். அவர் அவரது அனுபவத்தில் இருந்த சொத்தை சட்டப்படி கிரயம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியில்லை. முதல் பிரதிவாதி வனிதா என்பவர் திருபெரும்புதூர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார் தெரியுமா என்றால் தெரியாது. இரண்டாம் பிரதிவாதி மகாலிங்கம் என்பவர் அசல் வழக்கு எண் 807/2018, 835/2008 ஆகிய இரண்டு வழக்குகள் முதல் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி மூன்று வழக்குகளும் விசாரணை முடித்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. அந்த வழக்குகளில் உங்களை ஒரு தரப்பினராக சேர்க்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்த தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த இடைக்கால மனுவுக்கு எதிராக நீங்கள் மேல் முறையீடு செய்யவில்லை என்றால் அந்த வழக்கு விவரங்கள் எனக்கு தெரியாது. அந்த வழக்கில் இரண்டாவது பிரதிவாதி மேல்முறையீடு செய்து அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. முதல் பிரதிவாதி இரண்டாம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்த அசல் வழக்கு 818/2008 என்கிற வழக்கு அனுமதிக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கில் முதல் பிரதிவாதி வழக்கு சொத்தின் உரிமையாளர் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு விவரங்கள் உங்களுக்கு நன்கு தெரியும் வேண்டுமென்றே நீங்கள்

தெரியாது என்று பொய் சொல்கிறீர்கள் என்றால் சரியில்லை அந்த வழக்கு அவர்களுக்கு நடைபெற்றது எங்களை கட்டுப்படுத்தாது. லட்சுமி பிரபன்ன ராமானுஜ தாஸ் அறக்கட்டளை முறைப்படி பதிவு செய்யப்படாத அறக்கட்டளை என்றால் சரி இல்லை வழக்கு சொத்துக்கும் 1913 ஆம் ஆண்டு பத்திரத்திற்கும் சம்பந்தமில்லை என்பதால் நீங்கள் அந்த பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை. 1913 தேதியிட்ட ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள சொத்துக்கள் ஆதிகேசவ பெருமாள் கோவிலுக்கு ஒப்படைக்கவில்லை என்றால் சரியில்லை நீங்கள் வாதி அறக்கட்டளைக்கு தக்கதாக இல்லை என்று சொன்னால் சரி இல்லை . சட்டமுறைப்படி நியமிக்கப்பட்டவர் இல்லை என்று சொன்னால் சரி இல்லை ஆகவே நீங்கள் நியமன உத்தரவு தாக்கல் செய்யவில்லை என்றால் சரியில்லை ஆவணங்கள் தேவைப்பட்டால் தாக்கல் செய்கிறேன். உங்களுக்கு இந்த வழக்கு தாக்கல் செய்ய உங்களுக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரி இல்லை. வாதிக்கு சொத்தில் உரிமை இல்லை என்பதால் தவறான சொத்து விவரங்களை சொல்லி வழக்கு தாக்கல் செய்திருக்கிறீர்கள் என்றால் சரியில்லை. தவறான சொத்து விவரங்களுடன் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்று சொன்னால் சரி இல்லை. முதல் பிரதிவாதி உரிமையாளர் என்று திருப்பெரும்புதூர் நீதிமன்ற வழக்கில் சொல்லியுள்ளதால் அவர் உரிமையாளர் என்று சொன்னால் சரியில்லை. மேற்படி தீர்ப்பின் அடிப்படையில் இரண்டாம் பிரதிவாதிக்கு உரிமை

**இல்லை என்று சொன்னால் எனக்கு தெரியாது. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரி இல்லை.**

Type written by the Typist in Open Court to my Dictation and to my hearing read over and typo graphed to the witness and acknowledged by him / her to be correct.

Sd/- T.Thirumal,
Additional Subordinate Judge,
Kancheepuram